**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.74/2022- PW-3**

| | |
|---|---|
| Name | திரு.தினகரன் |
| Father Name | திரு.வடிவேலு |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 28.07.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி பவானி என்பவர் அழைத்தன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். வாதி பவானி என் மனைவி. என் மனைவி இல்லத்தரசி. என் குடும்பத்தையும், எங்கள் விவசாய நிலங்களையும் கவனித்துக்கொள்வார். பிரதிவாதி நந்தினி என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரதிவாதியின் கணவரின் தங்கையை எங்கள் ஊரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். அதனடிப்படையில் பிரதிவாதியை தெரியும். பிரதிவாதி அவரது கணவரின் தங்கையின் கணவர் திரு.சந்திரசேகர் என்பவர் மூலம் தனது இடத்தை விற்கப்போவதாக கூறினார். பிரதிவாதி அவரது இடத்தை அடமானமாக வைத்து பணம் கேட்டுள்ளார் என்றாலும், விற்பனை செய்ய எங்களை அனுகவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை ரூ.17 லட்சத்திற்கு விலைபேசி ரூ.16 லட்சம் முன்பணமாக பிரதிவாதிக்கு கொடுத்தோம். ரூ.16 லட்சத்தில், 2018-ம் ஆண்டு ரூ.10 லட்சத்திற்கு காசோலையாகோ/வரைவோலையாகவோ கொடுத்தோம். 2021-ல் ரூ.6 லட்சம் ரொக்கப்பணமாக கொடுத்தோம். இவ்வாறு பணம் கொடுத்த விவரத்தை வாதியின் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிக்கு ரூ.16 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எவ்வாறு பண வசதி இருந்தது என்றால் நான் கால்நடை மருத்துவத்துறையில் கால்நடை ஆய்வாளராக வேலை செய்து சம்பாதித்து சேமித்த பணத்திலும், எங்கள் குடும்ப விவசாய வருமானத்திலும், என் மனைவியின் அடமானம் வைத்தும், சிறிது பணம் கடனாக வாங்கியும் பிரதிவாதிக்கு கொடுத்தோம். நகை அடமானம் வைக்கப்பட்டதற்கான ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அடமான ரசீது தாக்கல் செய்யாததால் நான் நகையை அடமானம் வைத்து கடன் வாங்கியதாக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2018 ஆகஸ்ட் 20–ம் தேதி ரூ.15 லட்சம் விலை பேசி நானும், பிரதிவாதியும் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். அப்போது ரூ.10 லட்சம் காசோலையாக கொடுத்தோம். கனரா வங்கி காசோலை மூலம் கொடுத்தோம். 13.08.2021–ம் தேதி அந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, ரூ.17 லட்சம் கிரையத்திற்கு என் மனைவியின் பெயரில் ஒப்பந்தம் செய்து அன்றைய தேதியில் ரூ.6 லட்சம் ரொக்கமாக கொடுத்தோம் என்றால் சரிதான். 13.08.2021–ம் தேதி கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்ட போது ரூ.6 லட்சம் பணம் கொடுக்கவில்லை என்றாலும், ஏற்கனவே காசோலையாக கொடுத்த ரூ.10 லட்சத்திற்கு ரூ.100/–க்கு ரூ.5/– வீதம் வட்டி போட்டு ரூ.17 லட்சமாக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.10 லட்சத்திற்கு ரூ.100/–க்கு ரூ.5/– வீதம் வட்டி பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆற்காடு நகருக்கு சற்று வெளியில் உள்ளது. அதன் விஸ்தீரணம் 2,100 சதுர அடி ஆகும். 2021–ம் ஆண்டில் ஒரு சதுர அடி ரூ.1,150/– என பேசப்பட்டது. வழக்கு சொத்து 2021–ல் 25 லட்சம் மதிப்பு உடையது என்றாலும் அதை ரூ.15 லட்சத்திற்கு குறைவான விலைக்கு பிரதிவாதி கிரையம் கொடுக்கவில்லை என்றாலும், அடமானமாகத்தான் என்னிடம் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அடமானம் வைப்பதற்கு வந்த பிரதிவாதியிடம் நானும், பிரதிவாதியின் கணவரும் சேர்ந்து அவரை ஏமாற்றி கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்து வாங்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

Sd/-A.Balakrishnan,
I Additional District Judge,
Ranipet.